**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) - 2020**

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 5788–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் திருத்திய நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண வீதி அதிகாரசபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சொத்து முகாமை தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை பலப்படுத்துதல் மற்றும் மாகாண வீதிகளிற்கான நுழைவு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,875 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையாகும். செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் கூறு – 02 இன் திருத்திய மாதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,075 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109 மில்லியன் தொகையாகும். கூறானது அதன் நடவடிக்கைகளை 2019 மே 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 600.45 மில்லியன் தொகை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பணங்களாக காட்டப்பட்டிருந்த போதிலும் அதில் ஒப்பந்ததாரர்களுக்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருக்காத ரூபா 61.34 மில்லியன் தொகை உள்ளடங்கியிருந்தது. இதன் விளைவாக ஒப்பந்ததாரர்களிற்கான முற்பணக் கணக்கு அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 61.34 | ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 47.61 மில்லியன் தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 600.45 மில்லியன் தொகையான முற்பணங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் போது ஆலோசனை சேவைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 47.84 மில்லியன் உண்மையான தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 53.09 மில்லியனாக பிழையாகக் காட்டப்பட்டிருந்தது. | 5.25 | காசுப்பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிப்பதற்காக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டவாறு செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு அமைச்சுப் பதவியணியினர் எவரும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு பொருத்தமான அமைச்சுப் பதவியணியினர்களை உள்ளீர்க்கும் தேவைப்பாடு அவசியமானதாக காணப்படவில்லை. | அமைச்சரவைத் தீர்மானத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது இரண்டு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆண்டின் போது நான்கு நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 03 ஆம் பந்தி | வருகைதந்து பங்குபற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள 13 உத்தியோகத்தர்கள் மற்றும் 4 தனிப்பட்ட ஆலோசனையாளர்கள் வருகையை உறுதிப்படுத்துவதற்கு சரியான முறையைப் பயன்படுத்தியிருக்கவில்லை. | தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு இணங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் ரூபா 7,692.30 மில்லியன் தொகைக்கு 18 பொதிகளாக 302 கிலோமீற்றர் நீளமான 67 வீதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஆண்டில் 8 பொதிகள் மாத்திரமே வழங்கப்பட்டன. மிகுதி 10 பொதிகள் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தன. எனினும், அதில் ஆறு ஒப்பந்தப் பொதிகள் ஆண்டின் போது எந்தவிதமான பௌதீக செயன்முன்னேற்றத்தையும் கொண்டிருக்கவில்லை. | அமைச்சு மட்டத்திலான பெறுகை குழுவால் விலை வேறுபாடுகளை மீளாய்வு செய்வதற்கு காலம் எடுத்திருந்தது. | பெறுகை செயன்முறையை விரைவுபடுத்துவதற்கும் நிர்மாணத்தின் சிறந்த பௌதீக செயன்முன்னேற்றத்தை பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீள்கட்டமைப்பு பத்திரத்தின் பிரகாரம் செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது கட்டம் - 2 இற்காக ரூபா 7,769.86 மில்லியன் கிரயத்தில் வீதிகளை இனங்கண்டு விபரமான செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் எந்தவொரு செயன்முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட திட்டத்தை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆலோசனையாளரை தெரிவுசெய்து பணிக்கமர்த்துவதற்கான வழிகாட்டல் - 2007 இன் பிரகாரம் தனிப்பட்ட ஆலோசனையாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 9 ஒப்பந்த முகாமைத்துவ ஆலோசனையாளர்களுடன் சேர்ந்த வதிவிடப் பொறியியலாளர்கள், 3 ஒப்பந்த முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு ஆலோனையாளர்கள், 2 மூலப்பொருள் பொறியியலாளர்கள் மற்றும் மதிப்பீட்டிற்கான ஆலோசனையாளர்கள் (ஈஜஆர்ஆர்) மேற்படி வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள | கருத்துரை வழங்கப்படவில்லை. | வழிகாட்டல்களை கடைபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்பாடுகளைப் பின்பற்றாமல் செயற்திட்டத்தின் தனியான ஆலோசனையாளர்களாக நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | மாதாந்த வேலைத் திட்டத்தில் வேலைகள் நிச்சயமாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் வேலை நிறைவேற்றல் அறிக்கை மாதாந்த வேலைத் திட்டத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மாதாந்த வேலைத் திட்டத்திற்கும் வேலை நிறைவேற்றல் அறிக்கைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சிறந்த வேலைத் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது வேலைத் திட்டத்துடன் மாதத்தின் போது நிறைவேற்றப்பட்ட வேலைகளை ஒப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தற்போதைய சந்தை விலைவிகிதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கேள்வி விலை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏழு பொதிகளின் பொறியியலாளர் மதிப்பீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உண்மையான மதிப்பீட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் வேலைத் திட்டம் என்பன வழிநடாத்தல் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வேலைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன வழிநடாத்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட முடியாதிருந்தது. | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து வழிநடாத்தல் குழுவிடமிருந்து அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுக்காக நிதி முகாமையாளர் (PS-3) மற்றும் ஒன்பது கணக்காளர்கள் (PS-4) நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிதி முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | **'Quick Book'** என்ற மென்பொருளை கொள்வனவு செய்வதற்கு பெறுகை செயன்முறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | நிதி உடன்படிக்கையின் பிரகாரம் நிதி முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்ட செயற்பாட்டு கைநூல் இன்னும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வழிநடாத்தல் குழுவிடமிருந்து அங்கீகாரம் கோரப்படுகின்றது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாட்டு கைநூலை தயாரித்து அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |